# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

Case No : STC No.223/2025 Date: 23.10.2025
Deposition of Witness for : பு.சா.1
Name : அங்கமுத்து

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணை :-**

1) நான் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், வட்டப்பரப்பில் வசித்து வருகிறேன். நான் M.Sc., (physics) படித்துள்ளேன். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் திருச்சி, சமயபுரத்தை சார்ந்த கண்ணன் என்பவர் மூலம் எனக்கு எதிரி அறிமுகமானார். எதிரி Whirlpool நிறுவனம் மற்றும் ஹோம் கேர் சர்வீஸ் டீலராக இருந்தார். கண்ணன் என்பவர் எதிரியுடன் பணபரிவர்த்தனை செய்திருந்தார். அந்த வகையில் கண்ணன், என்பவர் எதிரியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

2) கண்ணர் என்பவர் திருச்சி, சமயபுரத்தில் உள்ள சிங்காரவேலன் நகரில் வசித்து வருகிறார். மேற்சொன்ன, கண்ணன் என்பவர் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறாரா என்றால் இல்லை, விவசாயம் செய்து வருகிறார். கண்ணன் என்பவரை எனக்கு யார் என்றே தெரியாது என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எத்தனை கடனுறுதி சீட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 12-09-2023 ம் தேதியிட்ட ஒரு கடனுறுதி சீட்டும், 05-06-2024 ம் தேதியிட்ட ஒரு கடனுறுதி சீட்டும் தாக்கல் செய்துள்ளேன்.

3) கடனுறுதி சீட்டில் காசோலை கொடுத்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் வட்டிக்கு தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை, நான் தங்க நகை விற்பனை செய்து வருகிறேன். நான் தங்க நகை விற்பனை செய்து வருகிறேன் என்பதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் 2020 ம் ஆண்டு முதல் செலுத்தி வருகிறேன். 2022 மற்றும் 2023 ம் ஆண்டுகளுக்கான வருமான வரி கணக்கை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,

Sd/-Angamuthu

Judicial Magistrate No.1,
Sankari.